பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

**இயந்திராதிகள் செயலிழப்பு காப்புறுதி**

## 1. காப்பீட்டு விடயதானம்

இயந்திராதிகள் செயலிழப்பு காப்புறுதியானது, காப்புறுதி செய்யப்பட்ட இயந்திராதிகளுக்கு, தொழில் நுட்ப அல்லது மின்சார செயலிழப்புகளினால் ஏற்படும் எதிர்பாரா பௌதீக இழப்பு அல்லது சேதத்துக்கெதிராக பாதுகாப்பு வழங்குகின்றது. இயந்திராதிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கும் போதும், ஓய்விலிருக்கும் போதும், அத்தோடு, காப்புறுதி செய்யப்பட்ட இடத்தினுள் வைத்து கழற்றுதல், துப்புரவு செய்தல், பரீட்சித்தல், மீள் பொறுத்துதல் அல்லது இடமாற்றல் ஆகிய நிலைகளிலும் காப்பீடு பிரயோகமாகும்.

காப்புறுதியை தனியாக பெற்றுக் கொள்ள முடியாது. இயந்திராதிகள் உட்பட காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்களைக் காப்பீடு செய்யும் தீ காப்புறுதிப் பத்திரத்துடன் இணைத்து எடுக்கப்பட வேண்டும்.

## 2. காப்பீடு செய்யப்பட்டவை யாவை?

அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள இயந்திராதிகளுக்கு, செயலிழப்பின் ஏற்படக் கூடிய எதிர்பாரா பௌதீக இழப்பு அல்லது சேதத்தை இக்காப்புறுதிப் பத்திரமானது காப்பீடு செய்யும். இயந்திராதிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கும் போதும், ஓய்விலிருக்கும் போதும், அத்தோடு, காப்புறுதி செய்யப்பட்ட இடத்தினுள் வைத்து துப்புரவு செய்தல், பரீட்சித்தல் அல்லது திருத்துதல் போன்ற நோக்கங்களுக்காக கழற்றுதல், இடமாற்றல் அல்லது மீள் பொறுத்துதல் ஆகிய நிலைகளின் போதும் இக் காப்பீடு பிரயோகமாகும்.

## 3. காப்பீடு செய்யப்படாதன யாவை?

- தீ, வெடிப்பு (செயலிழப்பின் காரணமாக உள் வெடித்தலை விடுத்து), மின்னல், ஆகாய விமானம், களவு, வெள்ளம், நிலநடுக்கம், இடிந் விழுதல் அல்லது மற்றும் இயற்கை அனர்த்தங்கள்.
- வேண்டுமென்றே அதி பாரமேற்றுதல், பரீட்சித்தல் அல்லது பரீட்சார்த்த உபயோகம்.
- வழங்குனர்கள், ஒப்பந்தக்காரர்கள் அல்லது திருத்துனர்கள் ஒப்பந்த அல்லது சட்ட ரீதியாக பொறுப்பேற்ற சேதம்.

- காப்புறுதிப் பத்திரத்தின் தொடக்கத்தில் வெளியிடப்படாத அறிந்திருந்த குறைபாடுகள் அல்லது பிழைகள்.
- (குறிப்பாக உள்ளடக்கப்படாதிருப்பின்) அத்திவாரங்களும் சிற்ப வேலைகளும்.
- துரப்பான்கள், பட்டை வாற்கள், சில்லுகள், வார்கள், கயிறுகள், கம்பிகள், தூரிகைகள், பட்டரிகள் போன்ற மாற்றீடு செய்யத் தக்க பாகங்கள்.
- மசகு பதார்த்தங்கள், எரி பொருட்கள், இரசாயனங்கள் போன்ற இயக்கப் பதார்த்தங்கள்.
- அரைத்தல் தளங்கள், திரைகள், வலையுந் தன்மையான குழாய்கள் போன்ற அதி தேய்மானத்துக்குரிய தளங்களும் பாகங்களும்.
- தேய்மானம், உருக்குழைதல், துருப்பிடித்தல், அரிப்பு, எண்ணெய்ப்படிவு, சிதலேற்படல் அல்லது வேறும் தொடர் சீர்குழைதல்.
- கலையம்ச அல்லது புற சேதங்கள் (உ+ம். கீறுபட்ட வர்ணப் பூச்சு).
- உபயோகமின்மை, விளைவாந்த இழப்பு அல்லது மறைமுக இழப்புகள்.

### 4. காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

### 5. காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்

காப்புறுதி செய்யப்பட்ட இயந்திராதிகள் நல்லை நிலையில் பேணப்பட வேண்டியதுடன், சகல பிரயோகமாகும் நியதிமுறைகளுக்கும் பாதுகாப்பு அவசியப்பாடுகளுக்கும் இணங்க செயற்படுத்த வேண்டும்.

ஏதும் இழப்பு, சேதம் அல்லது கோரிக்கையொன்றுக்கு வழி வகுத்தக்க சந்தர்ப்பங்கள் பற்றியும், அத்துடன், பொறுப்பின் மீது தாக்கம் செலுத்ததக்க குறைபாடுகள் இயக்க மாற்றங்கள் பற்றியும் பயார்பஸ்ட் இன்சூரன்ஸுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

மேலும் இழப்புக்களையும் சேதங்களையும் ஆகவும் குறைக்கு முகமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், காப்புறுதி வழங்குனரின் சம்மதம் பெறப்பட்டிருந்தால் அன்றி,சேதமைழந்த பொருட்கள் மாற்றப்படாமலும் அல்லது திருத்தப்படாமலும், பார்வைக்காக பாதுகாக்கப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட சகல ஆதாரங்களும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், கோரிக்கை விசாரணையின் போது முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

வர்த்த நடவடிக்கைகளின் ஏதும் முடிவுறுத்தல் அல்லது வங்குரோத்து அல்லது உரிமை மாற்றங்கள் பற்றி பயார்பஸ்ட்டுக்கு அறிவிக்க வேண்டியதுடன், காப்புறுதி வழங்குனரின் பரிசீலனைக்காக அனுமதியும் வழங்க வேண்டும்,

## 6. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎+94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

## 7. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎+94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

**முக்கிய குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்